**டிசம்பர் – 18**

# TNPSC துளிகள்


- அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு (FDA) ஆனது கோனோரியாவுக்கு (மேக வேட்டைப் பாதிப்பு) நுசோல்வென்ஸ் (சோலிஃப்ளோடாசின்) மற்றும் புளூஜெபா (ஜெபோடிடாசின்) என்ற இரண்டு புதிய வாய்வழி மருந்துகளை அங்கீகரித்துள்ளது.
- புது டெல்லியில் நடைபெற்ற முதல் கோ கோ உலக கோப்பை போட்டியைத் தொடர்ந்து, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், முதல் காமன்வெல்த் கோ கோ சாம்பியன்ஷிப் போட்டியை இந்தியா நடத்த உள்ளது.
- உத்தரகாண்ட் மாநிலம் அல்மோராவைச் சேர்ந்த கவிதா சந்த், 4,892 மீட்டர் உயரமுள்ள அண்டார்டிகாவின் மிக உயரமான சிகரமான மவுண்ட் வின்சன் சிகரத்தை வெற்றிகரமாக ஏறினார்.
- இந்திய அணியானது, சென்னையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஹாங்காங்கை தோற்கடித்து WSF (உலக ஸ்குவாஷ் கூட்டமைப்பு) ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2025 போட்டியில் வென்றது, இது ஸ்குவாஷ் போட்டியில் அதன் முதல் உலகக் கோப்பைப் பட்டத்தைக் குறிக்கிறது.
- மூத்தப் பத்திரிகையாளர் சங்கீதா பருவா பிஷாரோட்டி இந்தியப் பத்திரிகையாளர் மன்றத்தின் முதல் பெண் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ஆபரேஷன் தண்டர் 2025 எனப்படும் வனவிலங்குகள் மற்றும் வனத்துறைக் குற்றங்களுக்கு எதிரான உலகளாவியச் சட்ட அமலாக்க நடவடிக்கையானது உலக சுங்க அமைப்பு (WCO) உடன் இணைந்து சர்வதேச காவல் துறையினால் (இன்டர்போல்) நடத்தப் பட்டது.
- போண்டி கடற்கரைத் தீவிரவாதத் தாக்குதல் ஆனது, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் தேதியன்று ஆஸ்திரேலியாவின் சிட்னியில், ஹனுக்கா பை தி சீ கொண்டாட்டத்தின் போது நடைபெற்றது.
  - ஹனுக்கா (சானுக்கா) என்பது யூதர்களின் எட்டு நாள் குளிர்கால "விளக்குகளின் பண்டிகை" ஆகும்.
- 100 ஆண்டுகளுக்கு முன்பு M.K. காந்தி அவர்களால் பாராட்டப் பட்ட ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீகாகுளத்தைச் சேர்ந்த பாண்டுரு காதி எனும் பருத்தித் துணிக்கு புவி சார் குறியீடு வழங்கப்பட்டது.
- அபிக்யான் குண்டு (17), துபாயில் நடைபெற்ற 19 வயதிற்குட்பட்டோருக்கான 2025 ஆம் ஆண்டு ஆசியக் கோப்பை போட்டியில் மலேசிய அணிக்கு எதிரான போட்டியின் போது இளையோர் ஒருநாள் போட்டிகளில் இரட்டை சதம் அடித்த முதல் இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தூத்துக்குடி முத்துக்கள்

- தூத்துக்குடி முத்து உற்பத்தியாளர்கள் சங்கம் ஆனது புவி சார் குறியீட்டினைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளது.
- தூத்துக்குடி முத்துக்கள் ஆனது 2,000 ஆண்டுகளுக்கும் மேலான பதிவு செய்யப்பட்ட வரலாறு கொண்ட, மன்னார் வளைகுடாவில் இயற்கையாகப் பெறப்படும் முத்துக்கள் ஆகும்.

- தூத்துக்குடியில் முத்து குளித்தல் நீண்ட காலமாக நடைபெற்று வருவதால், இது "முத்துக்களின் நகரம்" என்று அழைக்கப்படுகிறது.
- இந்த முத்துக்கள் இயற்கையாகவே உருவாகி வட்ட, அரை வட்ட மற்றும் பொத்தான் வடிவ வடிவங்களில் காணப்படுகின்றன.
- முத்துக்கள் மென்மையான மேற்பரப்புகள், நேர்த்தியான அமைப்பு மற்றும் வெள்ளை, பாலேடு, வெளிர் மஞ்சள், இளஞ்சிவப்பு மற்றும் வெள்ளி நிற வெள்ளை போன்ற வண்ணங்களைக் கொண்டுள்ளன.
- தூத்துக்குடி முத்துக்கள் அவற்றின் பிரகாசமான பளபளப்புக்குப் பெயர் பெற்றவை என்பதோடு இது பெரும்பாலும் "பால் பளபளப்பு" என்று விவரிக்கப்படுகிறது.
- தூத்துக்குடி முத்துக்கள் இந்திய, ரோமானிய, கிரேக்க, அரபு, மத்திய தரைக்கடல் மற்றும் கிழக்கு ஆசியச் சந்தைகளில் வர்த்தகம் செய்யப்பட்டன.
- இன்றைய தூத்துக்குடிக்கு அருகிலுள்ள பண்டைய கொற்கை துறைமுகம் முத்து வர்த்தகத்தின் ஆரம்பகால மையமாக இருந்தது.
- பட்டினப்பாலை மற்றும் மதுரைக்காஞ்சி போன்ற சங்க இலக்கியங்களில் கொற்கை குறிப்பிடப் பட்டுள்ளது.
- காலனித்துவ காலத்தில், போர்த்துகீசியம், டச்சு, பிரெஞ்சு மற்றும் ஆங்கிலேயர்கள் முத்து குளித்தல் நடைமுறையை கட்டுப்படுத்தி வரி விதித்தனர்.
- காலனித்துவ அதிகாரிகள் தூத்துக்குடியில் சர்வதேச வணிகர்களை ஈர்த்த முத்து ஏலங்களை நடத்தினர்.
- பரவர் சமூகத்தினர் பாரம்பரியமாக முத்து குளிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தனர்.
- பாண்டிய மற்றும் சோழப் பேரரசுகளின் செல்வ வளத்திற்கு முத்து வர்த்தகம் முக்கியப் பங்களித்தது.




# தேசியச் செய்திகள்


## தேசிய லோக் அதாலத் 2025

- 2025 ஆம் ஆண்டின் 4வது தேசிய லோக் அதாலத் இந்தியா முழுவதும் 2.59 கோடி தகராறுகளை வெற்றிகரமாகத் தீர்த்துள்ளது.

- 2022–23 முதல் 2024–25 ஆம் ஆண்டு வரை, நாடு முழுவதும் பல்வேறு லோக் அதாலத்கள் மூலம் 23.5 கோடிக்கும் அதிகமான வழக்குகள் தீர்க்கப் பட்டன.
- 1987 ஆம் ஆண்டு சட்ட சேவைகள் அதிகாரிகள் சட்டத்தின் கீழ் லோக் அதாலத்கள் நிறுவப்பட்டன.
- அவை மாற்றுத் தகராறு தீர்வு (ADR) மூலம் விரைவான மற்றும் செலவு குறைந்த நீதியை வழங்குகின்றன.
- தேசிய நீதித்துறை தரவுக் கட்டமைப்பின் (NJDG) படி, 4.7 கோடிக்கும் அதிகமான நிலுவையில் உள்ள வழக்குகளைக் குறைப்பதே லோக் அதாலத்களின் நோக்கமாகும்.
- லோக் அதாலத்கள் இந்திய தலைமை நீதிபதியை (CJI) தலைமைப் புரவலராகக் கொண்டு தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தால் (NALSA) ஏற்பாடு செய்யப் படுகின்றன.




## தேசிய இரத்த மாற்று மசோதா 2025




- இந்தியா முழுவதும் இரத்த சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்காக தேசிய இரத்த மாற்று ஆணையத்தை உருவாக்க இந்த மசோதா முன்மொழிகிறது.

- இரத்தம் மற்றும் இரத்த கூறுகளை சேகரித்தல், பரிசோதித்தல், பதப்படுத்துதல், சேமித்தல், வழங்கல் மற்றும் மாற்றுவதற்கான சீரான தேசியத் தரநிலைகளை அமைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இரத்த மாற்றம் என்பது தலாசீமியா மற்றும் பிற இரத்தக் கோளாறுகள் உள்ள நோயாளிகளுக்கு, வழக்கமான மற்றும் பாதுகாப்பான இரத்த வழங்கல் தேவைப்படும் ஒரு உயிர்காக்கும் சிகிச்சையாகும்.
- இந்த மசோதா அனைத்து இரத்த மையங்களையும் பதிவு செய்வதை கட்டாயமாக்குகிறது மற்றும் தன்னார்வ இரத்த தானத்தை ஊக்குவிக்கிறது.
- இது பாதுகாப்பற்ற அல்லது இணங்காத இரத்த மாற்று நடைமுறைகளுக்கு கடுமையான தண்டனைகளை அறிமுகப்படுத்துகிறது.

## உயர்கல்வி மசோதா 2025




- மத்திய அரசானது, 2025 ஆம் ஆண்டு விக்சித் பாரத் சிக்சா அதிஷ்தான் மசோதாவை மக்களவையில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த மசோதா இந்தியாவின் உயர்கல்வி ஒழுங்குமுறை கட்டமைப்பைச் சீர்திருத்தம் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பல்கலைக்கழக மானியக் குழு (UGC), அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி சபை (AICTE), மற்றும் தேசிய ஆசிரியர் கல்வி சபை (NCTE) ஆகியவற்றை இணைத்து, ஒரே உயர் நிலைக் கட்டுப்பாட்டு அமைப்பை உருவாக்குவதை இந்த மசோதா முன்மொழிகிறது.
- மூன்று சபைகளுடன் சேர்த்து, விக்சித் பாரத் சிக்சா அதிஷ்டானை ஓர் உச்ச அமைப்பாக நிறுவுவதற்கு இந்த மசோதா விதிகளை வழங்குகிறது:
    - விக்சித் பாரத் சிக்சா வினியமான் பரிஷத் (ஒழுங்குமுறை சபை)
    - விக்சித் பாரத் சிக்சா குன்வட்டா பரிஷத் (அங்கீகார சபை)
    - விக்சித் பாரத் சிக்சா மானக் பரிஷத் (தரநிலை சபை)

- இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகங்கள், இந்திய மேலாண்மை கல்வி நிறுவனங்கள், தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் மற்றும் இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனங்கள் இந்தச் சட்டத்தின் கீழ் வெளிப்படையாக சேர்க்கப்பட்டுள்ளன.
- 10 மற்றும் 11 ஆகிய பிரிவுகள், எதிர்கால விதிமுறைகள் மூலம் நிறுவன சுயாட்சியைப் பாதுகாப்பதோடு, அங்கீகாரம் மற்றும் இணக்கம் குறித்த அதிகாரங்களுடன் ஓர் ஒழுங்குமுறை சபையை நிறுவுகின்றன.
- இந்த மசோதா மத்திய, மாநில, தனியார், நிகர்நிலை, இணைக்கப்பட்ட, தன்னாட்சி, தொழில்நுட்ப, ஆசிரியர், திறந்தவெளி, இயங்கலை மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்குப் பொருந்தும் என்பதால், சட்டரீதியானச் சீர்திருத்தத்தை 2020 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கை (NEP) உடன் இணைக்கிறது.
- உயர்கல்வி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான 13 உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பை அமைப்பதற்கான மசோதாவை மக்களவை பாராளுமன்றத்தின் கூட்டுக் குழுவிற்குப் பரிந்துரைக்கிறது.
- அந்தக் கூட்டுக் குழுவில் மக்களவையின் 21 உறுப்பினர்களும், மாநிலங்களவையின் 10 உறுப்பினர்களும் இருப்பார்கள்.

# சர்வதேசச் செய்திகள்

## 75 ஆண்டு கால இந்தியா-ஜோர்டான் கூட்டாண்மை





- 1950 ஆம் ஆண்டில் இந்தியாவும் ஜோர்டானின் ஹாஷிமைட் பேரரசும் அரசுமுறை உறவுகளை ஏற்படுத்தின என்ற ஒரு நிலையில் 2025 ஆம் ஆண்டானது அதன் 75 ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இருதரப்பு ஒத்துழைப்பு ஆனது அரசியல், பொருளாதாரம், உத்தி சார், பாதுகாப்பு மற்றும் மக்களிடையேயான துறைகளில் பரவியுள்ளது.
- சுமார் 40 ஆண்டுகளுக்குப் பிறகு முதலாவது முழுமையான இருதரப்புப் பயணமாக

இந்தியப் பிரதமர் ஜோர்டானுக்குப் பயணம் மேற்கொள்ள உள்ளார்.

- சுமார் 2.8 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான இருதரப்பு வர்த்தகத்துடன் இந்தியா ஜோர்டானின் மூன்றாவது பெரிய வர்த்தகப் பங்களிப்பவராக உள்ளது என்ற நிலையில் ஜோர்டான் இந்தியாவிற்குப் பாஸ்பேட் மற்றும் பொட்டாஷை வழங்குகிறது.
- ஜோர்டானில் மேற்கொள்ளப் படும் இந்திய முதலீடுகள், 500 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான மொத்த முதலீடுகளைக் கொண்ட 15க்கும் மேற்பட்ட ஆடை உற்பத்தி நிறுவனங்களை உள்ளடக்கியது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை – நவம்பர் 2025





- இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறையானது 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 61 சதவீதத்திற்கும் மேலாகக் குறைந்து 6.6 பில்லியன் அமெரிக்க டாலர்களாகக் குறைந்தது.
- இந்தியாவின் மொத்த ஏற்றுமதி 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 15.5% அதிகரித்து 74 பில்லியன் டாலராகவும், மொத்த இறக்குமதி 0.6% குறைந்து சுமார் 80.6 பில்லியன் டாலராகவும் இருந்தது.
- 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அமெரிக்காவிற்கான இந்தியாவின் ஏற்றுமதி 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தினை விடவும், கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்ததை விடவும் அதிகமாக இருந்தது.
- 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஒப்பிடும் போது 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தங்க இறக்குமதி கிட்டத்தட்ட 60% குறைந்து 4 பில்லியன் டாலராக இருந்தது.
- சேவைகள் ஏற்றுமதி 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சுமார் 12% அதிகரித்து 38.5 பில்லியன் டாலராகவும், சேவைகள் இறக்குமதி சுமார் 8.1% அதிகரித்து 18.6 பில்லியன் டாலராகவும் இருந்தது.

## வங்கித் துறையில் உறுதித்தன்மை மற்றும் இலாபம்

- இந்தியாவின் வங்கித் துறையானது வாராக் கடன்களில் (NPA) கடந்த 20 ஆண்டுகளில்

இல்லாத அளவுக்கு குறைந்த அளவிலும், சமீபத்திய ஆண்டுகளில் வலுவான இலாப வளர்ச்சியையும் பதிவு செய்தது.

- மொத்த வாராக் கடன்கள் (NPA) 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 2.31% ஆகக் குறைந்துள்ளது என்பதோடு இது கடந்த 20 ஆண்டுகளில் மிகக் குறைந்த அளவாகும்.
- நிகர வாராக் கடன் 0.52% ஆகக் குறைந்து, சிறந்த மீட்பு மற்றும் இடர் கட்டுப்பாட்டைக் காட்டுகிறது.
- பொதுத்துறை வங்கிகள் (PSB) 2021 ஆம் ஆண்டில் 9.11% ஆக இருந்த மொத்த வாராக் கடன் அளவை 2025 ஆம் ஆண்டில் 2.58% ஆகக் குறைத்தன.
- பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள் (SCB) 2024–25 ஆம் நிதியாண்டில் (FY) 4.01 லட்சம் கோடி ரூபாயை ஈட்டியதுடன் வங்கி இலாபம் ஆனது சாதனை அளவை எட்டியது.
- உள்நாட்டு வைப்புத் தொகை 2015 ஆம் ஆண்டில் 88.35 லட்சம் கோடி ரூபாயிலிருந்து 2025 ஆம் ஆண்டில் 231.90 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.
- இடர் உண்டாக்கும் சொத்துகள் மீதான மூலதன விகிதம் (CRAR) 2025 ஆம் ஆண்டில் 17.36% ஆக உயர்ந்ததுடன், மூலதன நிறைவுத் தன்மை மேம்பட்டது.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### இந்தியாவின் முதல் பக்கவாத சிகிச்சை சாதனம்

- பக்கவாத சிகிச்சைக்காக புது டெல்லியின் எய்ம்ஸ் மருத்துவமனை இந்தியாவில் முதல் முறையாக சூப்பர்நோவா ஸ்டெண்டின் மருத்துவ பரிசோதனையை நடத்தியது.
- சூப்பர்நோவா ஸ்டென்ட் என்பது இந்தியாவின் பல்வேறு நோயாளிகளுக்காக என்று வடிவமைக்கப் பட்ட ஒரு புதிய மற்றும் மேம்பட்ட பக்கவாத சிகிச்சை சாதனமாகும்.
- இந்தியாவில் பக்கவாதம் ஆனது பெரும்பாலும் மேற்கத்திய நாடுகளை விட இளம்


வயதிலேயே ஏற்படுவதால், இந்த சாதனம் இந்திய நோயாளிகளுக்கு ஏற்றது.

- இது உள்நாட்டு மருத்துவப் பரிசோதனையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட இந்தியாவின் முதல் பக்கவாத சிகிச்சை சாதனம் ஆகும்.
- தற்போது இந்தியாவில் தயாரிக்கப்பட உள்ள இந்த சாதனம், ஒவ்வோர் ஆண்டும் 17 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்கவாத நோயாளிகளுக்குப் பயனளிக்கும்.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### மத்தியப் பிரதேசத்தில் சிவிங்கிப் புலிகள் சரணாலயம்




- அடுத்த பருவமழைக்கு முன்னதாக நெளராதேஹியில் உள்ள வீராங்கனை துர்காவதி புலிகள் சரணாலயம் சிவிங்கிப் புலிகளின் வாழ்விடமாக உருவாக்கப்படும் என்று

மத்தியப் பிரதேசம் அறிவித்துள்ளது.

❖ குனோ தேசியப் பூங்கா (ஷியோபூர்) மற்றும் காந்தி சாகர் சரணாலயம் (மாண்டசௌர்) ஆகியவற்றிற்குப் பிறகு மாநிலத்தின் மூன்றாவது சிவிங்கிப் புலிகள் சரணாலயமாக இது இருக்கும்.


❖ குனோ தேசியப் பூங்காவில் தற்போது 28 சிவிங்கிப் புலிகள் உள்ளன; காந்தி சாகர் சரணாலயத்தில் 2 சிவிங்கிப் புலிகள் உள்ளன.

❖ சிவிங்கிப் புலிகளின் வளங்காப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் போட்ஸ்வானாவிலிருந்து மேலும் எட்டு சிவிங்கிப் புலிகள் இட மாற்றம் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

❖ 1950 ஆம் ஆண்டுகளில் ஆசிய சிவிங்கிப் புலிகள் அழிந்த பிறகு உலகளவில் சிவிங்கிப் புலிகளை வெற்றிகரமாக மறு அறிமுகம் செய்த ஒரே நாடாக இந்தியா உள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய கடவுச் சீட்டுத் தரவரிசை 2025




❖ ஆர்டன் கேபிடல் வெளியிட்ட கடவுச் சீட்டுக் குறியீடு, 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய கடவுச் சீட்டுத் தரவரிசையை வெளியிட்டது.

❖ 2025 ஆம் ஆண்டில் ஐக்கிய அரபு அமீரகம் உலகின் வலிமையான கடவுச் சீட்டைக் கொண்டுள்ளது.

❖ உலகளாவிய கடவுச் சீட்டு தரவரிசையில் சிங்கப்பூர் மற்றும் ஸ்பெயின் ஆகியவை இரண்டாவது இடத்தில் உள்ளன.

❖ இந்தியக் குடிமக்களுக்கு மிதமான கட்டுப்பாடுகளுடன் கூடிய சர்வதேசப் பயண அணுகலைக் காட்டும் வகையில் இந்தியா 67வது இடத்தில் உள்ளது.

❖ 2025 ஆம் ஆண்டில் அமெரிக்கா 9வது இடத்திலும், ஐக்கியப் பேரரசு 8வது இடத்திலும் உள்ளது.

- இந்தத் தர வரிசைகள் நுழைவு இசைவு சீட்டு இல்லாத, வருகையின் போது நுழைவு இசைவு சீட்டுப் பெறுதல் மற்றும் இணைய வழிப் பயண அங்கீகாரம் (ETA) அணுகலைக் கணக்கிடுகின்றப் போக்குவரத்து மதிப்பெண்ணை அடிப்படையாகக் கொண்டவை ஆகும்.

# மாநிலச் செய்திகள்

## உத்தரப் பிரதேசம் மற்றும் ஹரியானாவில் தூய்மையான காற்று திட்டங்கள்

- உத்தரப்பிரதேசம் மற்றும் ஹரியானாவில் காற்றின் தரத்தை மேம்படுத்துவதற்காக என்று 600 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புள்ள திட்டங்களை உலக வங்கி அங்கீகரித்தது.
- இந்தத் திட்டங்கள் காற்று மாசுபாட்டைக் குறைப்பதன் மூலம் சுமார் 270 மில்லியன் மக்களுக்கு பயனளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- உத்தரப் பிரதேச தூய்மையான காற்று மேலாண்மைத் திட்டம் (UPCAMP) 299.66 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பீட்டினைக் கொண்டுள்ளது.
- நிலையான மேம்பாட்டிற்கான ஹரியானா தூய்மையான காற்றுத் திட்டம் சுமார் 300 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பீட்டினைக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டங்கள் இந்திய-கங்கை சமவெளிகள் மற்றும் இமயமலை அடிவாரத்தில் உள்ள பிராந்திய காற்று தர மேலாண்மைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சிவராஜ் பாட்டீல் மறைவு

- மூத்த காங்கிரஸ் தலைவரும் முன்னாள் மத்திய உள்துறை அமைச்சருமான சிவராஜ் பாட்டீல் சமீபத்தில் காலமானார்.
- 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை மக்களவையின் 10வது சபாநாயகராக பணி ஆற்றினார்.

- பாதுகாப்பு, வணிகம், பொது விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலா உள்ளிட்ட முக்கியமான மத்திய அமைச்சரவை இலாகாக்களை பாட்டீல் வகித்தார்.
- மக்களவையில் லத்தூர் தொகுதியின் பிரதிநிதியாக தொடர்ந்து ஏழு முறை அவர் பதவி வகித்தார்.
- பாட்டீல் 2010 முதல் 2015 ஆம் ஆண்டு வரை பஞ்சாப் ஆளுநராகவும் சண்டிகரின் நிர்வாகியாகவும் பணியாற்றினார்.
- ஒளிபரப்பு நடவடிக்கைகள் மற்றும் பாராளுமன்ற நூலகத்தைக் கட்டமைத்தல் உள்ளிட்டப் பாராளுமன்ற நடைமுறைகளை நவீனமயமாக்குவதில் அவர் பெயர் பெற்றவர்.
- 26/11 மும்பை தீவிரவாதத் தாக்குதலுக்கு தார்மீகப் பொறுப்பேற்று பாட்டீல் 2008 ஆம் ஆண்டில் மத்திய உள்துறை அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார்.




# இதரச் செய்திகள்

## பைசன் ஹார்ன் மரியா நடனம்

- சத்தீஸ்கரின் ஜக்தல்பூரில் உள்ள ஜூடியா பாராவில் தண்டமி மடியா பழங்குடியினர் பாரம்பரிய பைசன் ஹார்ன் (காட்டெருது கொம்பு) மரியா நடனத்தை நிகழ்த்தினர்.
- இந்த நடனம் இப்பகுதியின் கலாச்சாரப் பெருமை மற்றும் தண்டமி மடியா சமூகத்தின் நீடித்த மரபின் அடையாளமாகும்.
- தண்டமி மடியா (மரியா என்றும் உச்சரிக்கப்படுகிறது) மக்கள் நீண்ட காலமாக தெற்கு சத்தீஸ்கரின் கலாச்சார கட்டமைப்பினை வடிவமைத்துள்ளனர்.
- ஆண்கள் மற்றும் பெண்கள் இருவராலும் நிகழ்த்தப்படுகின்ற இந்த நடனத்தில்

ஆண்கள் காட்டெருது கொம்புகள் வடிவில் இறகுகளால் அலங்கரிக்கப்பட்ட, மூங்கிலால் செய்யப்பட்ட கொம்பு வடிவத் தலைக் கவசத்தை அணிந்து நடனமாடச் செய்கின்றனர்.




## இளம் ரைன்சோசர் புதைபடிவம்

- இதுவரையில் பதிவு செய்யப்பட்ட மேக்ரோசெபலோசொரஸ் மரியான்சிஸ் எனும் இளம் ரைன்சோசர், சிஸ்டமேடிக் பேலியோண்டாலஜி எனும் பிரிட்டிஷ் இதழில் விவரிக்கப் பட்டுள்ளது.
- இந்தப் புதைபடிவம் தெற்கு பிரேசிலில் கண்டெடுக்கப் பட்டது.
- இந்த மாதிரியானது <2.5 செ.மீ அளவுள்ள ஒரு மண்டை ஓட்டைக் கொண்டுள்ளது என்பதோடு இது இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகச்சிறிய ரைன்சோசர் குஞ்சு ஆகும்.
- இந்தப் புதைபடிவமானது மேக்ரோசெபலோசொரஸ் மரியான்சிஸுக்கு என்று மிகவும் முக்கியமான தனித்துவமான அம்சங்களைக் காட்டுகிறது.
- இந்த மாதிரி ஹைப்பரோடாபெடோன்டினே கிளேடின் முதல் பெரினேட் பதிவையும், கண்டப் படிவுகளில் காணப்படும் மிகப் பழமையான ஆர்கோசௌரோமார்ஃப் குஞ்சுகளில் ஒன்றையும் குறிக்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★